19.08.2025

S.C.No. 292/2022

PW. 5 Tr. திரு. கமல்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில்) :-**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன். டிரைவராக உள்ளேன். எவ்வளவு காலமாக டிரைவராக உள்ளேன் என்றால் 3, 4 வருடங்களாக டிரைவராக உள்ளேன். நான் கொடுத்ததாக சொல்லும் அ.சா.ஆ. 13 புகாரில் யாராவது அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த புகாரை நான் இசக்கிராஜாவிடம் கொடுத்தேனா அல்லது பரத்லிங்கத்திடம் கொடுத்தேனா என்றால் காவல் நிலையத்தில் வாங்கி கொண்டார்கள் யாரிடம் கொடுத்தேன் என ஞாபகம் இல்லை. அ.சா.ஆ. 13 புகார் எழுதும்போது கேசவராஜன் மற்றும் வரதராஜன் ஆகியோர் பெயர் எனக்கு தெரியும் என்றால் போலீசார் சொல்லியதை வைத்து எனக்கு தெரியும். பைக்கை போலீசார் எங்கு வைத்து, எந்த தேதியில் எடுத்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அது என்ன பைக் என்றால் ேஹாண்டா ஆக்டிவா பைக். அந்த பைக்கின் உரிமையாளர் என காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பைனான்சில் இருந்த வண்டி. அசல் ஆவணம் என்னிடம் இல்லை. ஆர்.சி. புத்தகத்தின் நகல் இருந்ததா என்றால் இருந்தது. அது என்னிடம்

கேட்கவில்லை. தற்போது அந்த பைக்கின் ஆவணங்கள் என்னிடம்தான் உள்ளதா என்றால் இல்லை, அந்த பைக்கை நான் விற்றுவிட்டேன். 01.05.2017 ஆம் தேதி நான் எந்த ஒரு இரு சக்கர வாகனத்திற்கும் உரிமையாளர் அல்ல என்றாலும்அதனால்தான் என்னால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கறிஞர் செண்பகவல்லியை இன்னொரென்று அறிமுகப்படுத்தியது யார் என்றால் நீதிமன்றத்தில் வந்து விசாரித்தேன், அவர்கள் சொன்னார்கள் யார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இசக்கிராஜாவும், பரத்லிங்கமும் சொல்ல சொல்ல தான் புகார் எழுதினேன் என்ற விவரத்தை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்திலோ அல்லது சமாதான மனுவிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த பிரமாண பத்திரமும், சமாதான மனுவும் மதுரை உயர்நீதிமன்றத்திலேயே வைத்து தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பிரமாண பத்திரத்திலும், சமாதான மனுவிலும் நானும், கேசவராஜன் மற்றும் வரதராஜன் ஆகியோர் கையொப்பம் செய்துதான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். குற்ற எண். 168/2017 ஐ குவாஸ் செய்வதற்குதான் அந்த பிரமாண பத்திரமும், சமாதான மனுவும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உறுதிமொழி ஆவணத்தில் குவாஸ் மனு சம்பந்தப்பட்ட விவரங்களை உறுதிபடுத்துவதற்கான விவரங்கள்தான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் சொன்ன பிரமாண பத்திரமும், சமாதான மனுவும் தயார் செய்து கொண்டு வந்தது வழக்கறிஞர் செண்பகவல்லி என்றால் சரிதான். நான் மதுரை உயர்நீதிமன்றத்திற்கு யாருடன் சென்றேன்

என்றால் செண்பகவல்லி, கேசவராஜன் மற்றும் வரதராஜன் ஆகியோர் அழைத்ததின்பேரில் அவர்களுடன் சென்றேன். உறுதிமொழி பத்திரம் மற்றும் சமாதான மனு ஆகியவை எத்தனை மொத்தம் எத்தனை பக்கம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த உறுதிமொழி பத்திரத்தில் என்ன எழுதியிருந்தது என்று தற்போது ஞாபகம் உள்ளதா என்றால் இரு தரப்பினரும் சமாதானமாக செல்வதாக எழுதியிருந்தது. அ.சா.ஆ.15 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள உயர்நீதிமன்ற உத்தரவில் அந்த சமாதான மனு 13.10.2017 தேதியிட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 மற்றும்2 ஆம் எதிரிகளுக்கு எதிராக என்னை கட்டாயப்படுத்தி பொய் புகார் எழுதி வாங்கினார்கள் என எந்த ஒரு புகாரையும் மாவட்ட கண்காணிப்பாளருக்கோ, உயர்நீதிமன்றத்திற்கோ, மனித உரிமை ஆணையத்திற்கோ அனுப்பவில்லை என்றால் சரிதான். கேசவராஜன் மற்றும் வரதராஜன் ஆகியோர் என் பக்கத்து ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர் எனக்கு நண்பரா என்றால் இல்லை. பழக்கமா என்றால் இல்லை. அவர்களுடைய தந்தை மூன்று பேரை கொன்ற வழக்கில் தண்டனை பெற்றவர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவர்களுடைய உறவினர் சகாயமூர்த்தி என்றால் தெரியாது. என்னிடம் வலுக்கட்டாயமாக புகாரை எழுதி வாங்கியதாக கூறுவது குறித்து காவல் நிலையத்தில் CCTV பதிவுகளை கேட்டு பெற முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.சா.ஆ. 14 உறுதிமொழி ஆவணத்தின் நகல் என ஒரு போலியான ஆவணத்தை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 14 ன் அசல்

ஆவணத்தை நீதிமன்றத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உயர்நீதிமன்ற தாக்கல் செய்திருந்த ஆவணத்தில் குறிப்பிட்டிருந்ததாக நான் சொல்லும் விவரங்களுக்கு முற்றிலும் மாறாக அ.சா.ஆ. 14 ல் உள்ளது என்றால் சரியல்ல. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தை எவ்வளவு நாட்கள் ஒர்க் ஷாப்பில் விட்டிருந்தேன் என்றால் ஒரு நாள் விட்டிருந்தேன். அவ்வாறு ஒர்க ஷாப்பில் விட்டிருந்த வாகனத்தை போலீசார் எடுத்து சென்றிருந்தார் என்றும் அதனால் அந்த வாகனத்தை வாங்குவதற்காக காவல் நிலையம் சென்றிருந்தபோது என்னிடம் கையொப்பம் வாங்கியிருந்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற எண். 168/2017 வழக்கில் சமரசமாக முடித்துவிட்டு அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டி தற்போது பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் முதல் விசாரணையில் சொல்லியதுபோல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில்) :-**

1 மற்றும் 2 ஆம் எதிரிகள் தரப்பில் மேலே செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.